# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 80 — 1973 ඔක්තෝබර් 05 වැනි සිකුරාදා — 1973.10.05

80 ம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்வதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 383 | வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| பதவிகள்—வெற்றிடம் | 386 | வரவு செலவுத் திரட்டுகள் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | — | ஆதன விற்பனைகள் | — |
| துணைவிதிகள் | 391 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் | 391 |


*கவனிக்க.—அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கம் (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான் இவ்வறிவித்தல் வாயிலாக—

(1) மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள ஹப்பிற்றி கமக்கோறளைப் பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள கொட்டதேனியாவக் கிராமப் பிரதேசத்தில் தற்போதமைந்துள்ள அத்தகைய வட்டாரங்களைப் புதிய வட்டாரங்களாக இணைப்பது சம்பந்தமாக 1964 யூலை 10 ன் 14,102 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை, அதனோடுள்ள அட்டவணைக்குப் பதிலாக இதனோடுள்ள அட்டவணையை இடுவதன்மூலம் திருத்துகிறேன் ; அத்துடன்

(2) இவ்வறிவித்தலின் (1) ம் பந்தியிலுள்ள ஏற்பாடுகள்—

(அ) முற்கூறப்பட்ட கொட்டதேனியக்கிராமப்பிரதேசத்துக் கிராமச் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 1974 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய எவ்விடயத்தோடும் அவ்வேற்பாடுகள் சம்பந்தப்பட்ட வரை இவ்வறிவித்தல் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமெனவும்,

(ஆ) வேறெவ்விடயத்தோடும் அவை சம்பந்தப்பட்டவரை 1974 ஆம் ஆண்டின் யூலை மாதத்து முதலாம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமெனவும் வெளிப்படுத்துகிறேன்.

நீல் த அல்விஸ்
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973. 09. 18.

அட்டவணை

| நிரை I | நிரை II |
|---|---|
| தற்போதுள்ள வட்டாரங்கள் | புதிய வட்டாரங்கள் |
| 53 (அ)—பராகொட | 3 ஆம் வட்டாரம்—பராகொட—பராகொட, கரவில கும்புற ஆகிய கிராமங்களைக் கொண்டது. |
| | 4 ஆம் வட்டாரம்—தியகம்பல—தியகம்பல, திவுல்தேனிய, கொறடமின்ன ஆகிய கிராமங்களைக்கொண்டது. |

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள், சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 05 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

| நிரை I<br>தற்போதுள்ள வட்டாரங்கள் | நிரை II<br>புதிய வட்டாரங்கள் |
|---|---|
| 52—ஹெற்றிமுல்ல .. | 6 ஆம் வட்டாரம்—ஹெற்றிமுல்ல ஹல்லொலுவ, ஹெற்றிமுல்ல, லொலாவ, யட்டிமீய ஆகிய கிராமங்களைக்கொண்டது.<br>7 ஆம் வட்டாரம்—கெலெகெதற—கெலெகெதற, கறபொட்டுவாவ, பொட்டேகெதற ஆகிய கிராமங்களையும் தியுபுறேமத்தோட்டத்தையும் கொண்டது. |
| 46—மடிதியாவல .. | 13 ஆம் வட்டாரம்—கலுஅக்கல |
| 44—வட்டேமுல்ல .. | இஹல கலுஅக்கலக்கிராமத்தையும் பறன ஹந்திய நாவன வீதிக்கு வடக்கேயுள்ள மடிதியாவலக்கிராம சேவகர் பிரிவின் அந்தப் பகுதியையும் கொண்டது.<br>14 ஆம் வட்டாரம்—மடிதியாவல—கொட்டபொலக் கிராமத்தையும் பறன-ஹந்திய நாவன வீதிக்குத் தெற்கேயுள்ள மடிதியாவலக்கிராம சேவகர் பிரிவின் அந்தப் பகுதியையும் கொண்டது. |
| | 15 ஆம் வட்டாம்ரம்—வட்டேமுல்ல—வட்டேமுல்லபஹல கலுஅக்கல, இனிதம்பன ஆகிய கிராமங்களைக்கொண்டது. |
| 42—ஹல்பே .. | 16 ஆம் வட்டாரம்—ஹல்பே—ஹல்பே கிராமத்தைக் கொண்டது.<br>17 ஆம் வட்டாரம்—நரியாமுல்ல—நரியாமுல்ல, குருல்லாகம, வல்பொலமுல்ல ஆகிய கிராமங்களைக் கொண்டது. |
| 43—இத்துல்வல இஹலகம | 18 ஆம் வட்டாரம்—இத்துல்வல இஹலகம இத்துல்வல இஹலகமக்கிராமத்தைக் கொண்டது.<br>19 ஆம் வட்டாரம்—இத்துல்வல பஹலகம இத்துல்வல பஹலகமக்கிராமத்தைக் கொண்டது. |

10–207/1—05.10.73—ந திகதிய வர்த்தமானி இல. 80

---

எல். டி.—பி. 27/39.

### கிராமச் சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பதில் அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த—அல்விஸ் ஆகிய நான், மொனருகலை மாவட்டத்திலுள்ள சித்தறம்பலாத்தைக் கிராமப் பிரதேசத்தில் இப்போதுள்ள வட்டாரங்கள் ஒவ்வொன்றினையும் இப்போதுள்ள அத்தகைய வட்டாரங்களின் இணைந்த பிரதேசத்தையும் புதிய வட்டாரங்களாகப் பிரித்தல் தொடர்பில் 1972 ஆம் ஆண்டு, ஒற்றோபர் 9 ஆந் தேதிய 28/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதான அறிவிப்பை இவ்வறிவிப்பின்மூலம் திருத்துகின்றேன்.

நீல். த. அல்விஸ்,
பதில் அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973.9.18.

அட்டவணை

| நிரை I<br>இப்போதுள்ள வட்டாரங்கள் | நிரை II<br>புதிய வட்டாரங்கள் |
|---|---|
| இல. 147—சித்தராம | வட்டாரம் இல. 1—பெவ்வெவ, அனுத்கொடகம, சித்தாராமகம, கல்வெவ, செனுக்குவாகம, பெர்லியாவெவகம, ஆகிய கிராமங்களைக் கொண்டுள்ள சித்தராம.<br>வட்டாரம் இல. 2—தனமல்வில கிராமத்தைக் கொண்டுள்ள தனமல்வில.<br>வட்டாரம் இல. 3—கொம்ாலிகம, பொட்கம ஆகிய கிராமங்களைக் கொண்டுள்ள பொடகம<br>வட்டாரம் இல. 4—கீழ், மேல் நிக்கவெவ, மீகஸ்வெவ, குட்டவெவ ஆகிய கிராமங்களைக் கொண்டுள்ள நிக்கவெவ. |
| இல. 148. சூரிய ஆர .. | வட்டாரம் இல. 5—நியதகல, நிகர அங்குணகொலபெலெஸ்ஸ, எவரிய பெலெஸ்ஸ, சூரியஆர ஆகிய கிராமங்களையும் மஹாவெல, கலுவெல்கலக் குடியேற்றங்களையும் கொண்டுள்ள அங்குணகொலபெலெஸ்ஸ.<br>வட்டாரம் இல. 6—கலவெல்கல கிராமத்தைக் கொண்டுள்ள கலவெல்கல |
| இல. 149.—ஹம்பேகமுவ ..<br>அத்துடன்<br>இல. 149 அ—உடவளவை | வட்டாரம் இல. 7—ஹம்பேகமுவ, செனுக்கல ஆகிய கிராமங்களைக் கொண்டுள்ள ஹம்பேகமுவ<br>வட்டாரம் இல. 8—அனுத்வெவ, நேபொட ஆகிய கிராமங்களைக் கொண்டுள்ள அனுத்வெவ.<br>வட்டாரம் இல. 9—கொடவெரமண்கட, இலிம்புன்ன ஆகிய கிராமங்களைக் கொண்டுள்ள இலிம்புன்ன.<br>வட்டாரம் இல. 10—கிரிஇப்பன் ஆர, மோ ஆர, சமஜிபுர ஆகிய கிராமங்களைக் கொண்டுள்ள கிரி இப்பன்ஆர<br>வட்டாரம் இல. 11—மஹாகம, தெமோதரக் கிராமங்களைக் கொண்டுள்ள மஹாகம.<br>வட்டாரம் இல. 12 பஹீரவக் கிராமத்தைக் கொண்டுள்ள பஹீரவ.<br>வட்டாரம் இல. 13—திஜ்ஜலான குருகம் வெட்டிய, இகிரியஜலான ஆகிய கிராமங்களைக் கொண்டுள்ள குருகம்வெட்டிய<br>வட்டாரம் இல. 14—ஹபரலுவேவ, கொவுலார, கடுபிலகம, தங்கெட்டிய திம்புலான, உடவளவை ஆகிய கிராமங்களைக் கொண்டுள்ள ஹபரலுவெவ. |

10–207/2—05.10.73—ந திகதிய வர்த்தமனி இல. 80

---

### கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவினுல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டுபதில் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான் மொனருகலை மாவட்டத்திலுள்ள மொனருகலை, வெடிகும்புற ஆகிய கிராமப்பிரதேசங்களில் தற்போதமைந்துள்ள வட்டாரங்களை உட்பிரிவினை செய்வது சம்பந்தமாக 1972 நவெம்பர் 3 ன் 32 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை இவ்வறிவித்தல் வாயிலாகப் பின்வருமாறு திருத்துகிறேன் :—

(1) பந்திகள் (1), (2) ஆகயவற்றிலுள்ள " புத்தள" என்னும் சொல்லுக்குப் பதிலாக "மொனருகலை" என்னும் சொல்லை இடுவதன்மூலம் ;

(2) அதனோடுள்ள முதலாம் அட்டவணையில் II ஆம் நிரையின் கீழ் 10 ஆம் வட்டாரத்தின் விவரணத்தில் " பறவிலவத்தை" என்னும் சொல்லுக்குப் பதிலாக " பறவிலவத்தை (பாகம்) " என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(3) அதனோடுள்ள இரண்டாம் அட்டவணையில் II ஆம் நிரையின்கீழ் 6 ஆம் வட்டாரத்தின் விவரணத்துக்குப் பதிலாகப் பின்வரும் விவரணத்தை இடுவதன்மூலம் :

"6 ஆம் வட்டாரம்—தெங்கல்லந்த, தெங்கல்லந்தக் குடியேற்ற பத்தைக் கொண்டது; "
அத்துடன்

(4) பந்தி 3 (அ), (ஆ) ஆகியவற்றிலுள்ள " 1973" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக " 1974" என்னும் இலக்கங்களை இடுவதன் மூலம்.

நீல் த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973.9.18

10–207/3—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

### கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவினல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான் மொனருகலை மாவட்டத்திலுள்ள மொனருகலைக் கிராமப்பிரதேசத்தின் எல்லைகளை மாற்றி, மீளவரையறை செய்வது சம்பந்தமாக 1972 நவெம்பர் 3 ன் 32ம் இலக்கக்க செற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை இக்கட்டளை வாயிலாகப் பின்வருமாறு திருத்துகிறேன் :—

(1) "புத்தல" என்னும் சொல்லுக்குப்பதிலாக " மொனருகலை " என்னும் சொல்லை இடுவதன்மூலம், அத்துடன்

(2) "1973" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக " 1974" என்னும் இலக்கங்களை இடுவதன்மூலம்.

நீல் த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு.
1973.9.18

10–207/4—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

### கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 5,10 ஆகிய பிரிவுகளினல் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான் மொனருகலை மாவட்டத்தில் புதிய வெடிகும்புறக் கிராமப் பிரதேசத்தில் அமைப்பது சம்பந்தமாக 1972 நவெம்பர் 3 ன் 32ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை இக்கட்டளை வாயிலாகப் பின்வருமாறு திருத்துகிறேன் :—

(1) அதன் கண்ணுள்ள (1) வது பந்தியில் " புத்தல" என்னும் சொல்லுக்குப் பதிலாகப்" மொனருகலை" என்னும் சொல்லை இடுவதன் மூலம் ; அத்துடன்

(2) அதன் கண்ணுள்ள (2) வது பந்தியில் " 1973" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக "1974" என்னும் இலக்கங்களை இடுவதன் மூலம்.

நீல் அத ல்விஸ்
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973.09.18

10–207/5—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

### இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டத்தின் 27 ம் பிரிவின் கீழ் அதற்கான தக்க அதிகார தாபனத்தால் அதாவது கொழும்பு மாவட்டத்தின் மீரிகமைப் பட்டின சபையினல் ஆக்கப்பட்டு அப்பிரிவினல் தமக்களிக்கப்பட்ட தத்துவ பலத்தைக்கொண்டு அரசாங்க, நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் உறுதிப் படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு.
1973 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 18 ந் உ.

#### ஒழுங்கு விதிகள்

1. இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் கீழ் பிரசித்தப்படுத்தப் பட்ட பொது மிருகமறுப்புக்களம் சௌக்கிய வைத்திய உத்தியோகத்த ரின் அல்லது அச்சார்பில் அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட எந்தப் பொதுச் சௌக்கியப் பரிசோதகரினதும் பொறுப்பில் இருத்தல் வேண்டும். அம்மிருகமறுப்புக்களத்தினுள் ஒழுக்க நடையும் சுகாதார நிலைமைகளும் நிலவுதற்கு அவ்வாறுய உத்தியோகத்தர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

2. (1) எவரும்—

(அ) சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரினல் அல்லது தலைவரால் அக்கருமத்திற்கென நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரினல் அம் மிருகம் பரிசோதிக்கப்பட்டு மனித பாவனைக்கு ஏற்றது என அங்கீகரிக்கப்பட்டாலன்றி, அல்லது

(ஆ) எத்தினத்திலும் மு.ப. 8.00 மணிக்கும் மத்தியானம் 12.00 மணிக்குமிடையிலன்றி,

எம்மிருகத்தையும் மிருகமறுப்புக்களத்தில் அறுக்கலாகாது. ஆயினும் விசேடமான தருணங்களில் இதன்கண் நிச்சயிக்கப்பட்ட நேரமல்லாத வேறெந்த நேரத்திலும் எம்மிருகத்தையும் அறுப்பதற்குத் தலைவர் அதிகாரமளிக்கலாம்.

(2) எவரும்—

(அ) (1) ம் பந்தியின் கீழ் அம்மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 30 மணித்தியால நேரம் காலாவதியான பின்னர் எந்நேரத்திலும், அல்லது

(ஆ) (1) ம் பந்தியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அது மிருகமறுப்புக்களத்திலிருந்து உயிருடன் வெளியே கொண்டு போகப்பட்டிருப்பின் அது மீண்டும் பரிசோதிக்கப்பட்டு அப் பந்தியின் கீழ் மனித பாவனைக்கு அறுக்கப்பட ஏற்றது என அங்கீகரிக்கப்பட்டாலன்றி,

எம்மிருகத்தையும் மிருகமறுப்புக்களத்தில் அறுத்தலாகாது.

3. மிருகமறுப்புக்களத்தின் வளவுக்குள் மிருகமெதையும் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அவ்வளவுக்குள் இருக்கையில் அம் மிருகத்துக்குப் போதிய அளவு தீனியும் தண்ணீரும் கிடைக்கச் செய்தற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

4. மிருகமறுப்புக்களத்தின் வளவுக்குள் மிருகமொன்றைக் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அறுக்கப்பட உகந்ததல்ல என நிராகரிக்கப்பட்டால் அப்படி நிராகரிக்கப்பட்ட உடனே, அம்மிருகத்தை அவ்வளவை விட்டு அகற்றவேண்டும் அல்லது அகற்றப்படச் செய்யவேண்டும்

5. ஒழுங்கு விதி 2 ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், அது நோயுற்றது அல்லது மனித பாவனைக்கு அறுக்கப்பட உகந்ததல்ல எனக் காணப்பட்டால் 2 ம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தி யோகத்தர் எவரும் எம்மிருகமும் அறுக்கப்படுவதைத் தடைசெய்யலாம்.

6. மிருகமறுப்புக்களத்தில் அறுக்கப்பட்ட எம்மிருகத்தினதும் இறைச்சி அல்லது கழிவிறைச்சி நோயுற்றது அல்லது மனித பாவனைக்கு உகந்ததல்லவென ஒழுங்குவிதி 2 ல் குறிப்பிடப்பட்டுள்ள எவ்வுத்தி யோகத்தரும் அபிப்பிராயப்பட்டால் அவர், அவ்விறைச்சியை அல்லது கழிவிறைச்சியை உடனடியாக அழித்தொழிக்கப்பட அல்லது அவ் அவ்விறைச்சி அல்லது அக்கழிவிறைச்சி விற்பனைக்காக வெளியில் வைக்கப்படாமல் அல்லது மனித பாவனைக்காக உபயோகிக்கப்படாமல் இருக்கத்தக்க வகையில் அது அகற்றப்படச் செய்யவேண்டும்.

7. மனித பாவனைக்கு உகந்தது என அங்கீகரிக்கப்படாத அல்லது ஒழுங்குவிதி 5 ன் கீழ் அதன் அறுப்பு தடைசெய்யப்பட்டிருக்கும் எம்மிருகத் தையும் அறுப்பதற்கு அறுப்புக்களப் பொறுப்பு உத்தியோகத்தர் அனுமதிக்கக்கூடாது.

8. (1) மனித பாவனைக்கு உகந்ததல்லவென 6 ம் ஒழுங்குவிதியின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட இறைச்சி அல்லது கழிவிறைச்சி எதையும் 2 ம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள எவ்வுத்தியோகத்தரினதும் ஆணையின் கீழன்றி அறுப்புக்களத்திலிருந்து எவரும் வெளியேற்றக்கூடாது.

(2) அறுப்புக்களப் பொறுப்பு உத்தியோகத்தரினல் சந்தர்ப்பத்துக்கேற்ப " மீ.ப.ச " என்னும் குறியினலும் " மாட்டிறைச்சி ", " ஆட்டிறைச்சி " எனவும் அம்மிருகச் சடலத்தின் முன்னங்கால் பாகத்திலும், பின்னங்கால் பாகத்திலும் முத்திரையிடப்பட்டாலன்றி, மனித பாவனைக்கென்வுள்ள எம்மிருகத்தின் சடலத்தையும் அறுப்புக்களத்திலிருந்து எவரும் வெளியே கொண்டுபோகக் கூடாது.

9. எம்மிருகமும், வேறெந்த மிருகத்தின் முன்னிலையில் அல்லது முன்னர் அறுக்கப்பட்ட ஒவ்வொரு மிருகத்தின் சடலமும் அவ்வளவிலிருந்து அகற்றப்படும்வரை அறுக்கப்படக்கூடாது.

10. (1) இதன் பின்னல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதற்கமைய அறுப்புக் களத்தை உபயோகிப்பதற்கு அறவிடப்படும் கட்டணம் கீழ்க் காணும் விகிதத்தில் இருக்கும்.

மாடுகள் ஒவ்வொன்றுக்கும் தலைக்கு ரூபா 2.00 ;

செம்மறியாடுகள் அல்லது வெள்ளாடு ஒவ்வொன்றுக்கும் ரூபா 1.00.

ஆயினும் அறுப்புக்களத்தினுள் கொண்டுவரப்பட்ட மிருகமேதாவது அறுப்பதற்கு உகந்ததல்லவென நிராகரிக்கப்பட்டால் அல்லது அறுப்புக் களத்திலிருந்து திருப்பி எடுத்துச் செல்லப்பட்டால் அம்மிருகத்துக்காக அறவிடப்படும் கட்டணம் 50 சதம் மட்டுமே.

(2) முதலாம் பத்தியின் படியான உரிய கட்டணத்தை மிருகத்தின் பொருட்டுச் செலுத்தி, அக்கட்டணத்தைச் செலுத்தியதற்கு ஆதாரமாகப் பெறப்பட்ட உத்தியோகபூர்வமான பற்றுச்சீட்டை அறுப்புக்களப் பொறுப்பாளரிடம் அல்லது அப்பற்றுச்சீட்டைப் பார்வையிடுவதற்கென்று தலைவரால் எழுத்தில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் காட்டினலன்றி எம்மிருகத்தையும் அறுப்புக்களத்தினுள் அறுக்கவோ அங்கிருந்து அகற்றவோ கூடாது.

11. அறுப்புக்களப் பொறுப்பாளர் அறுப்புக்களத்தில் அறுக்கப்பட்ட சகல மாடுகளுக்கும் ஒரு பதிவேட்டையும் சகல வெள்ளாடுகள், செம்மறியாடுகள் ஆகியவற்றிற்கும் ஒரு பதிவேட்டையும் வைத்திருக்க வேண்டும். அவ்வாறன பதிவேடுகள் பொருளளவில் பின்வரும் படிவத்தில் இருக்க வேண்டும்.

மாட்டுச் சீட்டு இல :————.
விபரம் :————.
நிறம் :————.
வயது :————.

குறிசுட்ட அடையாளங்கள் : —

வலது பக்கம் :————.
இடது பக்கம் :————.

இறைச்சிக்கடைக்காரர் பெயர் :————.
மாட்டுக் காலைக்கு வந்த நேரமும் திகதியும் :————.
பரிசோதித்த திகதி :————.
அறுத்த திகதி :————.
மாட்டைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரின் பெயர் முதலெழுத்து:
————.

ஒப்பம் :————.
குறிப்புகள் :————.

12. இவ்வொழுங்கு விதிகளில்—

" தலைவர் " என்பது சபைத் தலைவர் எனப்பொருள் படும் ;
" சபை " என்பது மீரிகமைப் பட்டின சபை எனப் பொருள்படும் ;
" சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் " என்பது மீரிகமைச் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் எனப் பொருள்படும் :
" கட்டளைச் சட்டம் " என்பது (272ம் அத்தியாயமான) இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச்சட்டம் எனப் பொருள்படும்.

10–42—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை " யின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

**படிகள்.**—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பால்து.

2. **சேவை நிபந்தனைகள்.**—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச்சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் எதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. **நியமன விதிகள்.**—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோக்த்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்தவேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவீதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவார். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின் படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும், அச்சேவையில், வேறொரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச்சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும்போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு, விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறுயினும் பெண்களும் 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச்சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள் 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட, 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச்சம்பள நிதிக்கு, தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சி மன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

4. **உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில் /இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் " புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின் " தகுதிகாண் நிலை /பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிச் கொள்கையை வினைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக் குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

(5) **கல்வியும் ஏனைய தகைமைகளும்.**—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

**குறிப்பு.**—(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

**குறிப்பு.**—(2) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக்கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

**குறிப்பு.**—(3) 4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்த விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. **போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.**—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படைவீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. **வயதுச்சலுகை.**—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும்பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. **வேண்டற்பால ஏனையவை.**—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா ? இல்லையா ? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும் ; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில்" விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

### வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப்பத்திரம்

### உள்ளூராட்சிச் சேவை

**முக்கியமாகக் கவனிக்க.**—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலிற் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யுமுன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றனர். விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் கட்டணங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

........................(..........) **பதவிக்கான விண்ணப்பம்**

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.

(ஆ) ........................ பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.
தேசியஇனம் :————.

(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா ? இலங்கையரல்லாதவரா ? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக)

3. தபால் விலாசம் :————.
(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :—
————வருடங்கள்————மாதங்கள்————நாட்கள்

(ஆ) பிறந்த திகதி :— வருடம் :————.
மாதம் :————. திகதி :————.

5. பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பகாரர் :————.

(ஆ) அவரது பிதா :————.

(இ) அவரது பிதாவழிப் பேரன் :————.

(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.

(விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்.)

6. விவாகமானவரா ? தனியாளரா ? அல்லது தாரமிழந்தவரா ? கைம்பெண்ணா ? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :—

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 .......... | ...... | ...... | 1 .......... | ...... | ...... |
| 2 .......... | ...... | ...... | 2 .......... | ...... | ...... |
| 3 .......... | ...... | ...... | 3 .......... | ...... | ...... |
| 4 .......... | ...... | ...... | 4 .......... | ...... | ...... |
| 5 .......... | ...... | ...... | 5 .......... | ...... | ...... |

8. கல்வித் தகைமைகள் :—

(அ) சி.பா.த. பத்திரம்/க.பொ.த.ப.(சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல் தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க.பொ.த.ப. (உயர்தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட திகதி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(இ) வேறும் கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) கீழ் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—

1. சிங்களம் :————.
2. தமிழ் :————.
3. ஆங்கிலம் :————.

9. பெற்றுள்ள எதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. உயர்தொழில்/தொழிநுட்ப/தொழில் அனுபவங்கள் :—

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றைவிட்ட திகதிகளுடன் தருக):—

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக :————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? :————

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா? :—

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக :————.

14. ஒரு நீதிமன்றத்தில் எதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர்? :————.

16. வேறு எதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவை யென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப் படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

### பிரதி சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன. நியமனத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி கொழும்பு மாநகரசபையின் பொது சுகாதார திணைக்களத்திற்கு நியமிக்கப்படுவார்.

25.05.1973 தேதியிட்ட இலங்கைக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV ல் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வேதனம் வருமாறு :—வருடாந்தம் ரூபா 14,400—3×480, 3×600—ரூபா 17,640. அரசாங்க வீதங்களுக்கேற்ப இளைப்பாற்றுச் சம்பளமில்லாத படிகள் கொடுக்கப்படும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—(1) எம்.பி.பி.எஸ். (இலங்கை) அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமைகளைப் பெற்றிருப்பதுடன், பின்வரும் தகைமைகளில் ஏதாவது ஒன்றும் விண்ணப்பதாரிடம் இருத்தல் வேண்டும்.

(2) (அ) அரச வைத்தியத்தில் எம். டி. (இலண்டன்) ;

(ஆ) பிரிட்டின், ரொரன்டோ பல்கலைக்கழகத்தில் டி.பி.எச்.;

(இ) எம்.பி.எச். (ஹவார்ட்) அல்லது அதற்குச் சமமான தகைமை;

(ஈ) பொது சுகாதார வேலையில் எம்.ஆர்.சி.பி. (லண்டன்) அல்லது (எடின்பரோ) ;

(உ) டி.ரி.பி.எச். (இலண்டன்), அத்துடன்,

(3) (அ) நிர்வாகத்திலும் பொது சுகாதார வேலையிலும் 5 வருட அனுபவம்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி கொழும்பு மாநகர எல்லைக்குள் வசிக்கும்படி வேண்டப்படுவதுடன் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்துவதிலிருந்தும் தவிர்க்கப்படுவார்.

5. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளுடன் சேர்க்கப்பட்டுள்ள படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 05.11.1973-க்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட படிவத்தில் உள்ள 9 வது, 13 வது பந்திகளுக்குப் பதிலாகப் பின்வருவன சேர்க்கப்பட வேண்டும் :—

(9) பெறப்பட்ட வைத்திய உயர் தொழிலுக்குரிய தகைமைகள், திகதிகளுடனும் ஸ்தாபனங்களின் பெயர்களுடன் குறிப்பிடப்பட வேண்டும் ;

(13) நிர்வாகம், பொது சுகாதார வேலை என்பவற்றிலுள்ள அனுபவம் பற்றிய விபரங்கள்.

7. உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு விண்ணப்பங்களையோ அல்லது மற்றைய கடிதத் தொடர்புகளையோ விலாசமிட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றே அல்லது முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. தகுதியுடைய விண்ணப்பகாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

எட்கா பர்னாண்டோ,
செயலாளர்,
உ.ஆ.சே.அ.சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 18 ந உ.

**10–32—05.10.73 ந திகதிய வர்த்தமானி இல. 80.**

---

### பொது சுகாதார தாதி பதவிகள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் இடமாற்றப்படத் தக்கவராவர்.

2. **திரட்டிய வேதனம்.**—(1) இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் பின்வருமாறு :—வருடாந்தம் 5,304—9×144—ரூபா 6,660. வருடாந்தம் ரூபா 5,736 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு. மணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் வீதங்கட்கும் நிபந்தனைகளுக்குமிணங்க ஒரு திருமணப்படியும் வழங்கப்படும். கீழ்க்கண்ட 3 (1) பந்தியில் விதிக்கப்பட்ட தகைமைகளையுடைய, பயிற்றப்பட்ட பொது சுகாதார தாதிகளுக்கு இவ்வேதன அளவு பொருந்தும்.

(2) வருடாந்தம் ரூபா 3,864—18×144—ரூபா 6,456. வருடாந்தம் ரூபா 5,304 பெறுமுன் வினைத்திறன்காண் தடையுண்டு. மணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குரிய வீதங்கட்கும், நிபந்தனைகட்குமிணங்க ஒரு திருமணப்படியும் வழங்கப்படும். கீழ்க்கண்ட 3(2), 3 (3) ம் பந்தியில் விதிக்கப்பட்ட தகைமைகளையுடைய தாதிகளுக்கு இவ்வேதன அளவு பொருந்தும். தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தத்தம் தகைமைகளுக்கும், அனுபவத்திற்கும் ஏற்றபடி உரிய வேதன அடிப்படையில் அமர்த்தப்படுவார்கள்.

3. **வேண்டப்படும் தகைமைகள்.**—

(1) பொதுத் தாதி சான்றிதழ், மருத்துவிச்சிச் சான்றிதழ், பொது சுகாதாரத் தாதி சான்றிதழ், அல்லது

(2) பொதுத் தாதிச் சான்றிதழ், மருத்துவிச்சிச் சான்றிதழ், அல்லது

(3) பொதுத் தாதிச் சான்றிதழ் (சான்றிதழ் பிரதி அனுப்பப்பட வேண்டும்).

**குறிப்பு.**—மருத்துவிச்சி சான்றிதழை உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

4. பரீட்சார்த்தி நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றங்களினால், இலவச கோலவுடை கொடுக்கப்படும். அவர்கள் அவ்வுள்ளூராட்சி மன்றங்கள் நகர எல்லைக்குள் வசிக்க வேண்டும்.

5. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச்சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனகளுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு 06.11.1973 ந திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட இப்படிவத்திலுள்ள 13 வது பந்திக்குப் பதிலாகப் (விசேட தகைமைகள்) பின்வருபவை இடப்பட வேண்டும் :—

" 13. (1) தாதித் தொழில் சம்பந்தமாகப் பெற்ற தகைமைகள் பற்றிய விபரங்கள்,

(2) பயிற்றப்பட்ட பொது சுகாதார தாதியா?

(3) மருத்துவிச்சித் தொழில் பயிற்சி பெறப்பட்டதா ".

7. விண்ணப்பம் காணமற்போய்விட்டது அல்லது தபாலில் தாமதமாகி விட்டது என்ற எந்தக் குற்றச்சாட்டும் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. கடைசித்தினம் வரைக்கும் தமது விண்ணப்பங்களை அனுப்பத் தாமதிக்கும் பரீட்சார்த்திகள் தாமே தமது நலனை இழப்பவராவார்கள்.

8. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரி இடப்பட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாக அனுப்பப்படக்கூடாது.

9. பிறப்புச் சான்றிதழ் பிரதி, வேண்டப்பட்ட தாதிச் சான்றிதழ் ஆகியவை இல்லாது வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட இடமுண்டு.

10. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றே அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எட்கார் பர்னாந்து,
செயலாளருக்காக,
உ.ஆ.சே.அ.ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு செப்டம்பர் மீ 25 ந உ.

**10–68—05.10.73 ந திகதிய வர்த்தமானி இல. 80**

### மருத்துவிச்சி பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினல் கோரப்படுகின்றன.

2. **வேதனம்**: இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருமாறு :— வருடாந்தம் ரூபா 2,640—16 x 60—ரூபா 3,600. மணமானவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் வீதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க ஒரு திருமணப்படியும் வழங்கப்படும். அரசாங்கத்திடமிருந்து இளைப்பாற்றுச் சம்பளம் பெறுபவர்கள், ஸ்தாபனக் கோவையின் அதிகாரம் VII பிரிவு 8ற் கிணங்க வேதனம் கொடுக்கப்படுவார்கள்.

3. **வேண்டப்படும் தகைமைகள்.**—

(அ) விண்ணப்பதாரர்கள் நல்ல தேகாரோக்கியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். வயதெல்லை இல்லை. ஆனல் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் சேவைக்குச் சேர்க்கப்பட்டால் அவர்கள் தற்காலிக அடிப்படையிலேயே சேர்க்கப்படுவார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் பதியப்பட்ட மருத்துவிச்சிகளாகவிருப்பதுடன், சுகாதார சேவைகள் அதிபரிடமிருந்து ஒரு திறமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—விண்ணப்பதாரர் 50 வயதிற்கு மேற்பட்டவராக இருக்குமிடத்து, கீழ்க்காணும் பிரிவு 8ல் தரப்பட்டுள்ள நிலையங்களுள் தாம் தெரிந்தெடுத்துள்ள நிலையத்தை அவர் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் IV வது பகுதியில் உள்ள, உள்ளூர் ஆட்சிச் சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் நிரப்பியனுப்பப்பட வேண்டும். 06.11.1973 ம் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

6. விண்ணப்பங்களும் அது சம்பந்தமான தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேரடியாக அனுப்பப்படக்கூடாது.

7. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக் கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் இடமாற்றத்திற்கு உரியவர் ஆவார்கள். அத்துடன் முதலில், உடனடியாக அவர்கள் கல்பிட்டி, வத்தளை, கொலன்னுவ, பாலியகொட, மொரட்டுவ, வேருவல, ஹற்றன்-டிக்கோயா, தங்காலை, கோட்டை, பியகம.

தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்படும் 50 வயதிற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் இடமாற்றம் செய்யப்பட மாட்டார்கள்.

எட்கா பெர்னன்டோ,
செயலாளர்,
உள்ளூராட்சி சேவை அதிகார சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 25 ந வ.

10–67—05.10.73 ம் திகதிய வர்த்தமானி இல. 80

---

### தாதி உதவித் தலைமைப் (மேற்றன்) பதவிகள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபை அலுவலகத்தினல் வரவேற்கப்படுகின்றன.

2. இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருடாந்தம் ரூபா 5,592—144 x 7—180 x 1—ரூபா 6,780 ஆகும். வருடாந்தம் ரூபா 6,168 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு. அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு பொருந்தும், வரிகளுக்கும் நிபந்தனைகளுக்குமிணங்க ஒரு திருமணப் படியும் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தியொருவரை அவரது தகைமைகளுக்கும் அனுபவங்களுக்குமிணங்க, ஒரு உயர்ந்த வேதனப் படியில் வைப்பது பற்றிப் பரிசீலிக்கப்படலாம்.

3. **தகைமைகள்.**—(அ) வயது 06.11.1973 இல் 40 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். உள்ளூராட்சிச் சேவையில் இல்லாதவர்களுக்கு (பிறப்புச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்.)

(ஆ) விண்ணப்பதாரர்களிடம் இருக்கவேண்டியவை :—

1. பொது தாதியியல் சான்றிதழ் ;

2. பொது சுகாதார தாதியின் சான்றிதழ் ; அல்லது கொழும்பு மாநகரசபைப் பிரதம சுகாதார மருத்துவ உத்தியோகத்தரினல் நடாத்தப்படும் திணைக்களத்துப் பரீட்சையில் சித்தியடையும் பொழுது விநியோகிக்கப்படும் சான்றிதழ். (பொது சுகாதார தாதியின் சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

4. நியமனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் கொழும்பு மாநகரசபையில் பொது சுகாதார திணைக்களத்துக்கு முதலில் நியமிக்கப்படுவர். கொழும்பு மாநகர எல்லைக்குள் அவர் வசிக்க வேண்டியதாகும்.

5. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 06.11.1973 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். குறிப்பிடப்படும் படிவத்தில் பின்வரும் விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும் :—

"(அ) பயிற்றப்பட்ட பொது சுகாதார தாதியா?
(ஆ) தாதியியலில் பெற்ற தகைமைகள் விபரங்கள், "

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த ஒரு உத்தியோகத்தருக்கும் நேரடியாக அனுப்பப்படக்கூடாது.

8. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூர் ஆட்சிமன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எட்கா பர்னந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 25 ந வ.

10–66—05.10.73 ந திகதிய வர்த்தமானி இல. 80.

# துணை விதிகள்

எல். டி. பி. 40/37.

**கண்டி மாநகரசபை**

மாநகரசபைகள் கட்டளைச்சட்டம்.

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 267, 272 ஆகிய பிரிவுகளின் கீழ் கண்டி மாநகர சபையின் விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதும் தேசிய அரசுப் பேரவையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான துணைவிதி.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 7, 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 18 ந் வ.

**துணைவிதி**

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1907 சனவரி 11 ஆந் திகதிய 6,165 ஆம் இலக்கக் கசெற்றுக்கான பிரபந்தத்தில் பிரசுரிக்கப்பட்ட கண்டி மாநகரசபைத் துணைவிதிகள், 107 ஆம் துணைவிதியில் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :—

(1) அத்துணைவிதியின் (அ) என்னும் விடயத்தில் " 1.25 " என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக " 2.00 " என்னும் இலக்கங்களை இடுவதன் மூலம்.

(2) அத்துணைவிதியின் (ஈ) என்னும் விடயத்தில் " 0.60 சதங்கள் " என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக " 1.00 " என்னும் இலக்கங்களை இடுவதன்மூலம்.

(3) அத்துணைவிதியின் (ஏ) என்னும் விடயத்தில் " 0.75 " என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக " 1.00 " என்னும் இலக்கங்களை இடுவதன்மூலம்.

10–9—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

# நானாவித அறிவித்தல்கள்

**1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூரதிகார தாபனங்கள் (நிலையான உபவிதிகள் பற்றிய சட்டம்)**

உள்ளூரதிகார தாபனங்கள் (நிலையான உபவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் கீழ் திருகோணமலை மாவட்டத்திற்கு குச்சவெளிக் கிராமசபைப் பிரதேசத்தின் கிராமசபையினால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் நியதிப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

தீர்மானம்

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1953 ஆம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 10 ஆம் திகதியின் 10,517 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1953 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 7 ம் திகதியின் 10,560 ஆம் இலக்க வர்த்தமானியில் அவ்வங்கீகாரம் பிரசுரிக்கப்பட்ட நிலையான உபவிதிகளின் 1 தொடக்கம் 37 முடியவுள்ள பாகங்களில் பகுதி 5 ல் 4 ம் உட்பிரிவை நீக்கியும் உள்ளூராட்சி அமைச்சரால் 1963 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ம் திகதியின் 13,679 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1965 ஆம் ஆண்டு தை மாதம் 8 ம் திகதியின் 14,287 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அதே நிலையான உபவிதிகளின் 38 ம் பாகத்தையும் உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு யூலை மாதம் 8 ம் திகதியின் 14,703 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு தை மாதம் 3 ஆம் திகதியின் 14,835 ஆம் இலக்க வர்த்தமானியில் அவ்வங்கீகாரம் பிரசுரிக்கப்பட்ட அதே நியமனத் துணைவிதியின் 39 தொடக்கம் 42 வரையும் உள்ள பாகங்களை இத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று குச்சவெளிக் கிராமசபை உள்ளூரதிகாரத் தாபனங்கள் நிலையான உபவிதிகள் சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

கு. கண்ணுச்சாமி,
தலைவர், குச்சவெளிக் கிராமசபை.

குச்சவெளிக் கிராம சபை,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 20 ந் வ.

10–138—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

**1969 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ம் திகதியின் 14,840 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது**

257 ம் அத்தியாயம் கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் திருத்தப்பட்ட 60 ம் இலக்க 1961 ம் ஆண்டின் 38 ம் பிரிவின்கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1969 ம் ஆண்டு மாசி மாதம் 7 ம் திகதிய 14,840 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானிமூலம் வெளியான புதிய வரிக்கட்டளையையும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கிலுள்ள செம்பியன் பற்றுக் கிராமச்சபை பிரதேசத்தில் 1973 ம் ஆண்டு தொடக்கம் அமுல் நடத்தப்படும் அறவிடுவதற்கான வரியின் தன்மையும் விகிதாசாரங்களும் கீழே தரப்பட்டுள்ளன. இவ்விடயம் 30.5.73 ம் திகதிய சபை மாதாந்தக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு 12.6.73 ம் திகதிய கூட்டத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

சி. முத்தையா,
அக்கிராசனர்.

செம்பியன்பற்றுக் கிராமசபை,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 20 ந் வ.

அட்டவணை

| நிரை I | நிரை II | |
|---|---|---|
| உத்தரவுச் சீட்டின் தன்மை | தொகை | |
| **டி 3 வியாபார உத்தரவுக் கட்டணங்கள் :** | | |
| | ரூ. | ச. |
| உணவுப்பொருட்களை விற்பனைசெய்யும் கடைகள் : அ. பகுதி | 50 | 0 |
| ஆ. பகுதி | 15 | 0 |
| தேனீர்ச்சாலை அல்லது கோப்பிக்கடை | 15 | 0 |
| ஆ. உணவும் சிற்றுண்டிச்சாலை | 20 | 0 |
| பாண் பேக்கரி | 25 | 0 |
| இறைச்சி விற்பனை செய்யும்கடை | 20 | 0 |

| நிரை I | நிரை II | |
|---|---|---|
| உத்தரவுச் சீட்டின் தன்மை | தொகை | |
| **டி 5 பிடிக்கும் மீன்களை பதனிடுதலும் விற்பனை செய்தலும் :** | | |
| | ரூ. | ச. |
| 1. வள்ளம் வலைவைத்து மீன்பிடி தொழில் செய்வோர் | 20 | 0 |
| இயந்திரவள்ளம் வைத்துத்தொழில் செய்வோர் | 20 | 0 |
| பாதைவலை வைத்துத்தொழில் செய்வோர் | 15 | 0 |
| இயந்திரம் இணைத்த கட்டுமரம் வைத்துத்தொழில் செய்வோர் | 15 | 0 |
| இயந்திரம் இணையாத கட்டுமரம் வைத்துத்தொழில் செய்வோர் | 2 | 0 |
| மொத்தவியாபாரத்தின் பொருட்டு மீனுக்கு ஐஸ் போடுதல் | 25 | 0 |
| பிடிக்கும் சொந்தமீனை ஐஸ் போடுதல் | 10 | 0 |
| மொத்த வியாபாரத்தின் பொருட்டு மீனப்தனிடல், கருவாடு சேகரித்து வைத்தல் | 25 | 0 |
| ஐஸ் மீன் கருவாடு சேகரித்து ஏற்றுமதி செய்பவர்களுக்கு | 25 | 0 |
| கொல்லுலை வைத்திருத்தல் | 20 | 0 |
| கள் சேகரித்து விற்பனை செய்யும் நிலையம் ஒன்றிற்கு | 50 | 0 |
| அரிசி ஆலை ஒன்று வைத்து நடத்துவதற்கு | 50 | 0 |
| உப்பு அரைக்கும் ஆலை ஒன்றிற்கு | 50 | 0 |
| ஏனைய உணவுப்பொருள்கள் அரைக்கும் ஆலை ஒவ்வொன்றிற்கும் | 15 | 0 |
| காற்றடைத்த குளிர்பான உற்பத்திநிலையம் | 50 | 0 |
| குளிர்பான விற்பனை நிலையம் | 10 | 0 |
| முடி அலங்கார நிலையம் | 15 | 0 |
| சலவைத்தொழிற்சாலை | 15 | 0 |
| இயந்திரம் திருத்தும் நிலையம் | 15 | 0 |
| மிதி வண்டி திருத்தும் நிலையம் | 10 | 0 |
| பனிக்கட்டி உற்பத்திச்சாலை | 50 | 0 |

10–1—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர்,** அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. **சனிக்கிழமைகளில்** மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. **சனிக்கிழமைகளில்** மு. ப. 11.00 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்றால்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

31. **சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் :—**

| **இலங்கைக் குடியரசு வர்த்தமானி** (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற **திகதியிலிருந்து** ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. | 0 | 50 | 0 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற **திகதியிலிருந்து** ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. | 1 | 0 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற **திகதியிலிருந்து** ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 0 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற **திகதியிலிருந்து** ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 0 | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான **பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு** என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். **சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை** செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | 5.10.73 | வெள்ளி | 28.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 12.10.73 | வெள்ளி | 5.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19.10.73 | வெள்ளி | 12.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 26.10.73 | வெள்ளி | 19.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| **நவெம்பர்** | 2.11.73 | வெள்ளி | 26.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 9.11.73 | வெள்ளி | 2.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி | 9.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி | 16.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி | 23.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| **திசெம்பர்** | 7.12.73 | வெள்ளி | 30.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 7.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 14.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 21.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் வ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.